செ.வெ.எண்: 84 நாள்: 29.11.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிய பகுதி நேர நியாயவிலைக்கடைக்கு ரூ.8 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், பனம்பட்டி ஊராட்சி, வாகைப்பட்டியில் எம்.எம்.16 நகர கூட்டுறவு பண்டகசாலை லிட்., புதுக்கோட்டை சார்பில் புதிய பகுதி நேர அங்காடியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த பகுதி நேர அங்காடியை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து முதல் விற்பனையை துவக்கி வைத்து பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவுத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு பொதுமக்களின் சிரமத்தை போக்கும் வகையில் அதிக தூரம் சென்று நியாயவிலைக்கடைகளில் பொதுமக்கள் பொருட்கள் வாங்குவதை தவிர்த்து தங்கள் பகுதிகளிலேயே தங்களுக்கு தேவையான பொருட்களை பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் வாகைப்பட்டியில் எம்.எம்.16 நகர கூட்டுறவு பண்டகசாலை லிட்., புதுக்கோட்டை சார்பில் புதிய பகுதி நேர அங்காடி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பொதுமக்களின் வீண் அலைச்சல் குறைவதுடன் நேரம் மிச்சமாகும்.

இதற்கு முன்பு பனம்பட்டியில் உள்ள முழுநேர அங்காடியில் 537 குடும்ப அட்டைதாரர்கள் தங்களுக்கு தேவையான பொருட்களை பெற்று வந்தனர். இதிலிருந்து வாகைப்பட்டியில் 85 குடும்ப அட்டைகளும், மாணிக்கம்பட்டியில் 64 குடும்ப அட்டைகளும், காதிரிப்பட்டியில் 21 குடும்ப அட்டைகளும், பிடாரம்பட்டியில் 21 குடும்ப அட்டைகளும் என மொத்தம் 191 குடும்ப அட்டைகள் தனியாக பிரிக்கப்பட்டு பெரும் முயற்சி எடுத்து வாகைப்பட்டியில் புதிய பகுதி நேர அங்காடி திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதி பொதுமக்களின் மிக நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த பகுதி நேர அங்காடி ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 9 மணி முதல் 1 மணி வரையிலும், மதியம் 2 மணி முதல் 6 மணி வரையிலும் செயல்படும். இதில் பொதுமக்கள் தங்களுக்கு தேவையான அரிசி, பருப்பு, மண்ணெண்ணெய், உப்பு போன்ற பல்வேறு உணவுப்பொருட்களை நியாயமான விலையில் பெறலாம். மேலும் இப்பகுதி பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று இந்த பகுதி நேர நியாயவிலைக்கடைக்கு நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.8 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பா.ஆறுமுகம், புதுக்கோட்டை நகர அர்பன் கூட்டுறவு பண்டகசாலைத்தலைவர் திரு.இரா.ராஜசேகரன், ஆத்மா குழுத்தலைவர் திரு.சாம்பசிவம், கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.வி.ராமசாமி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**